தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(20.01.2024 முதல் 24.01.2024)

அறிக்கைஎண்: 06/2024 தேதி : 19.01.2024

## அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 - 33 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 - 21 °செ ஆகவும் பதிவானது.

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (20.01.2024 முதல் 24.01.2024).

| கடந்த வார வானிலை (16.01.2024 முதல் 18.01.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (20.01.2024 முதல் 24.01.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 16/01 | நாள்-2 17/01 | நாள்-3 18/01 | தேதி | நாள்-1 20/01 | நாள்-2 21/01 | நாள்-3 22/01 | நாள்-4 23/01 | நாள்-5 24/01 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 2 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 31 | 31 | 30 |
| 21 | 20 | 21 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 21 | 21 | 21 |
| 4 | 4 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 1 | 6 | 4 | 4 |
| 88-57 | 88-50 | 93-60 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-50 | 90-50 | 90-50 | 90-50 | 90-50 |
| 9 | 7 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 12 | 10 | 10 | 10 |
| கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 20.01.2024 அன்று லேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 – 32 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 22 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 – 12 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI. |

| | | |
|---|---|---|
| நெல் | அறுவடை | அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த சம்பா நெல் வயல்களில் நெல் தரிசு ஊளுந்து பயிறு விதைக்கலாம். ஊளுந்துக்கு ஆடுதுறை – 3 ஆடுதுறை – 6 மற்றும் பச்சைப் பயறுக்கு ஆடுதுறை – 3 ஆகிய இரகங்கள் நெல் தரிசுக்கு ஏற்ற இரகங்கள் ஆகும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | இரவில் குளிர்ந்த வெப்பநிலை நிலவுவதால் கால்நடைகளை குறிப்பாக இளம் குட்டிகளை தகுந்த கொட்டகைகளில் அடைக்கவேண்டும். மேலும் வெப்பமூட்டிகள் (எ.கா. குண்டு பல்பு) பொருத்தினால் நுரையீரல் அழற்சி ஏற்படாது. |

## குறுஞ்செய்தி

மழையால் நனைந்த முதிர்ந்த நெற்பயிரை உடனடியாக அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமித்து வைக்கவும்.

.

**இயக்குநர்**